# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2085/11 - 2018 අගෝස්තු මස 21 වැනි අඟහරුවාදා - 2018.08.21

*2085/11 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி 7/2001* (III)

**1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டம்**

*1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

திலக் மாரப்பன,
வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2018, ஓகத்து 18.*

ஒழுங்குவிதிகள்

*2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதிய 2080/34 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2018 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க,* ஐக்கிய நாடுகள் சபை (ஈரான் தொடர்பான தடை விதிப்புகள்) பற்றிய ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*(1)* அதன் *3* ஆம் ஒழுங்குவிதியில் -

(அ) அதன் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும் :-

"(அ) இலங்கையிலுள்ள ஒவ்வொரு பிரசையும் இலங்கைக்கு வெளியேயுள்ள இலங்கையின் ஒவ்வொரு பிரசையும் ;";

(ஆ) அதன் (அ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(அஅ) இலங்கைச் சட்டமொன்றின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதும் எங்கேனும் அமைந்துள்ளதுமான கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்று ;"; அத்துடன்



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(2) அதன் 9 ஆம் ஒழுங்குவிதியில், அதன் (1) ஆம் பந்தியின் (ஆ) மற்றும் (இ) என்னும் உட்பந்திகளினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்திகளை இடுவதன் மூலமும் :-

"(ஆ) பெயர்குறிக்கப்பட்ட ஆளொருவரினால் அல்லது உருவகத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட ஆளொருவரினால் அல்லது உருவகத்தினால் ;

(இ) பெயர்குறிக்கப்பட்ட ஆளொருவரின் அல்லது உருவகத்தின் சார்பாக செயலாற்றும் ஆளொருவரினால் அல்லது உருவத்தினால் ; அல்லது

(ஈ) பெயர்குறிக்கப்பட்ட ஆளொருவரின் அல்லது உருவகத்தின் நன்மைக்காக.".

09- 88

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.